# விவசாயிகளைச் சென்றடையாத வேளாண் விளைபொருள் குழு

த. முருகானந்தம்

First Published : 09 Aug 2011 03:30:43 AM IST



தஞ்சாவூர்: காவிரி டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட வேளாண் விளைபொருள் குழு குறித்த விழிப்புணர்வு இன்னும் பெரும்பாலான விவசாயிகளைச் சென்றடையாத நிலையே உள்ளது.

விவசாயிகள் தங்களது விளைபொருள்களுக்கான விற்பனை வாய்ப்பைப் பெறுவதற்காக தனித்தனியாக வணிகர்களை நாடுவதால், கட்டுப்படியான விலை கிடைக்காத நிலை ஏற்படுகிறது. மேலும், தனி ஒரு விவசாயியின் விளைபொருள் மிகக் குறைந்த அளவிலேயே இருக்கும். கட்டுப்படியான விலை கிடைக்காததற்கு இதுவும் ஒரு காரணம்.

வேளாண் விளைபொருள் குழு என்பது, 15 முதல் 20 விவசாயிகளை உறுப்பினர்களாக, தலைவர், செயலர், பொருளாளரைக் கொண்ட நிர்வாக அமைப்பாகும். இந்தக் குழுவின் பெயரில் வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்கப்படும். இந்தக் குழுவில் உள்ள விவசாயிகள் தங்களது விளைபொருள்களை மொத்தமாக விற்க வேண்டும். இதன்மூலம், விவசாயிகளின் விளைபொருள்களுக்கு அதிக விலை கிடைக்கும். மொத்தமாக ஒரே இடத்தில் விளைபொருள்கள் கிடைப்பதால், வணிகர்களுக்கும் கொள்முதல் எளிதாகிறது. இந்த நோக்கத்திற்காகத்தான் வேளாண் விளைபொருள் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன.

இந்தக் குழுக்கள் அமைக்கும் திட்டத்தை வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை கடந்த 2008 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தியது. இதுவரை மாவட்டம் வாரியாக தஞ்சாவூரில் 140, திருவாரூரில் 100, நாகப்பட்டினத்தில் 135 குழுக்கள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. சுமார்

5 முதல் 6 லட்சம் விவசாயிகள் உள்ளதாகக் கூறப்படும் காவிரி டெல்டா மாவட்டங்களில் கடந்த 3 ஆண்டுகளில் 375 குழுக்கள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன.

காவிரி டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடிதான் அதிகம். அதுவும் அரசால் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டுவிடுகிறது. எனவே, தென்னை, பயறுவகை பயிர்கள், உளுந்து, பாசிபயறு, எள், கடலை, மக்காச்சோளம், பருத்தி, காய்கறிகள் போன்றவற்றுக்கு மட்டுமே வேளாண் விளைபொருள் குழு அமைக்கப்படுகிறது. காவிரி டெல்டாவில் பிரதானமாக சாகுபடி செய்யப்படும் நெல் பயிருக்கு குழுக்கள் அமைக்கப்படவில்லை. இதனால், இதுவரை அமைக்கப்பட்ட மொத்த குழுக்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று வேளாண் அதிகாரிகள் கூறுகின்றனர். எனினும், நெல் விவசாயிகள் சம்பா, தாளடி பருவத்திற்கு பிறகு பயறுவகைகள், எள், உளுந்து, கடலை போன்றவற்றைதான் ஒருபோகமாக விளைவிக்கின்றனர். ஆனால், இந்தக் குழு குறித்த விவரங்களும், போதுமான விழிப்புணர்வும் விசாயிகளுக்கு இல்லை என்பதால்தான் அதிக அளவில் குழுக்கள் உருவாகவில்லை எனக் கூறப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்ட வேளாண் வணிகப் பிரிவின் துணை இயக்குநர் (பொ) என். சம்பத்குமார் இதுகுறித்து கூறியது:

விவசாயிகளிடம் சுய உதவிக் குழுக்கள் சிறப்பு பெற்று விளங்குகின்றன. காரணம், அவற்றுக்கு கடனுதவி, மானிய உதவிகளை அரசு அளிக்கிறது. ஆனால், வேளாண் விளைபொருள் குழுவிற்கு எந்த நிதியுதவியும் வழங்கப்படுவதில்லை. ஆனால், விதைப்பதில் தொடங்கி, அறுவடைக்குப் பிறகும்கூட மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பங்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் தயார் செய்வது தொடர்பாக உரிய ஆலோசனைகளும், பயிற்சிகளும் இந்தக் குழுவில் உள்ள விவசாயிகளுக்கு அளிக்கிறோம். மேலும், பிற திட்டங்கள் மூலம் அளிக்கப்படும் பயிற்சிகள் அனைத்திலும் இந்தக் குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கிறோம்.

இவற்றையெல்லாம் விவசாயிகளிடம் விளக்கிக் கூறி, அதிகமான குழுக்களை அமைக்க முயற்சி செய்து வருகிறோம். தேவையான விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறோம். வரும் ஆண்டுகளில் குழுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றார் அவர். காவிரி டெல்டா மாவட்ட விவசாய சங்கங்களின் பொதுச் செயலர் ஆறுபாதி கல்யாணம் கூறியது:

எந்தெந்தப் பகுதியில் எவ்வளவு விவசாயிகள் உள்ளனர், அவர்கள் சாகுபடி செய்யும் பயிர்கள் விவரம், சாகுபடி பரப்பு போன்ற துல்லியமான கணக்குகள் அரசிடம் இல்லை. எனவே, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த விவரங்களைக் கொண்ட வேளாண் நிலையைக் கணக்கெடுக்க வேண்டும். கிராமங்கள் தோறும் கிராம வேளாண் உதவியாளர்களை நியமிக்க வேண்டும். அப்போதுதான் அரசுத் திட்டங்களும், விழிப்புணர்வும் விவசாயிகளை எளிதில் சென்றடையும் என்றார் அவர்.

பயனுள்ள இந்தக் குழு குறித்த விழிப்புணர்வு விவசாயிகளுக்கு ஏற்பட்டால், இந்தக் குழுவில் இணைய அவர்கள் மறுக்கமாட்டார்கள். அதற்கான பணிகளை அதிகாரிகள் விரைவுப்படுத்த வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் கருத்து.

**மாவுப்பூச்சி தாக்குதலை எதிர்கொள்ள விவசாயிகளுக்குப் பயிற்சி**

First Published : 08 Aug 2011 09:46:18 AM IST

நாமக்கல், ஆக. 7: மரவள்ளி சாகுபடியை பாதிக்கும் மாவுப்பூச்சி தாக்குதலை எதிர்கொள்ள நாமக்கல் மாவட்ட விவசாயிகளுக்கு அண்மையில் பயிற்சியளிக்கப்பட்டது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் ஜெ. குமரகுருபரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் அண்மையில் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் மாவுப்பூச்சியின் தாக்குதலால் மரவள்ளிக் கிழங்கு விவசாயம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர். பூச்சியைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகளை அனைத்துத் தரப்பு விவசாயிகளுக்கும் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதைத் தொடர்ந்து, லத்துவாடி வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகளும் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டன.

பூச்சிக்கொல்லி தெளிக்க வேண்டாம்: இந்த ஒட்டுண்ணிகள் சுமார் 100-ஐ மாவுப்பூச்சியால் பாதிக்கப்பட்ட வயல்களில் விட்டால் போதும். அவை பல்கிப் பெருகி அனைத்து மாவுப்பூச்சிகளையும் அழித்துவிடும்.

மேலும், ஒரு வயலில் இருந்து பிற வயல்களுக்கும் இந்த ஒட்டுண்ணி சென்று, மாவுப் பூச்சியின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும். இந்த ஒட்டுண்ணி மாவுப்பூச்சியை மட்டுமே அழிக்கும். பயிருக்கு எவ்விதத் தீங்கும் செய்யாது. எனவே, ஒட்டுண்ணிகளை வயலில் விட்ட பின் பூச்சிக்கொல்லி மற்றும் களைக்கொல்லி மருந்துகளைத் தெளிப்பதை விவசாயிகள் தவிர்க்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

![தினமலர்]

**மஞ்சள் விலை உயராததால் விவசாயிகள் ஏக்கம்**

ஆகஸ்ட் 09,2011,00:08



சென்னை,: மஞ்சள் விலை, கடந்த ஆண்டை விட 150 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளதால், இப்பயிரை அதிகளவில் பயிரிடும் தமிழகம் மற்றும் ஆந்திர விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், நடப்பாண்டில் மஞ்சள் சாகுபடியில் அவர்களுக்கு ஆர்வம் குறைந்துள்ளது.

நம் நாட்டின் சடங்கு, சம்பிரதாயங்கள் மற்றும் பாரம்பரிய கலாசாரத்தில் மஞ்சள் குறிப்பிடத்தக்க இடத்தை வகித்து வருகிறது. சர்வரோக நிவாரணி என்ற சிறப்புத் தன்மை கொண்ட மஞ்சள், சித்த, ஆயுர்வேத மருத்துவத்திலும், அலோபதி மருந்துகள் தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது. ஜவுளி,ஆரோக்கிய பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் இதன் பங்களிப்பு அதிகம் உள்ளது.உலகளவில், மஞ்சள் பயிரிடுவதில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. நம்நாட்டில் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில்தான் அதிக அளவில் மஞ்சள் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. நாட்டின் ஒட்டுமொத்த மஞ்சள் உற்பத்தியில், தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களின் பங்களிப்பு 76 சதவீதமாக உள்ளது. சர்வதேச மஞ்சள் உற்பத்தி, ஆண்டுக்கு 11-11.5 லட்சம் டன் என்ற அளவிற்கு உள்ளது. இதில், இந்தியாவின் பங்களிப்பு 78 சதவீதமாகவும், மொத்த வர்த்தகத்தில் 60 சதவீதமாகவும் உள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் ஒரு குவிண்டால் மஞ்சள் விலை 3,000 ரூபாய் வரை, ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டது.

இந்நிலையில், 2007ம் ஆண்டு ஒரு குவிண்டால் மஞ்சள் விலை 1,800 ரூபாய் என்ற அளவிற்கு குறைந்தது. இந்தியா, 2008-09ம் நிதியாண்டில் 248.58 கோடி ரூபாய் மதிப்பிற்கு, 52ஆயிரத்து 500 டன் மஞ்சளை ஏற்றுமதி செய்து புதிய சாதனை அளவை எட்டியது. மஞ்சள் விலை குறைந்ததால், அதனை பயிரிடுவதில் விவசாயிகளுக்கு ஆர்வம் குறைந்தது. இதனால், மஞ்சள் உற்பத்தி 8.5 - 9 லட்சம் டன் என்ற அளவில் இருந்து, 7.5-7.7 லட்சம் டன்னாக குறைந்தது. உற்பத்தி குறைந்தால், மஞ்சள் விலை

அதிகரிக்கத் தொடங்கியது.

கடந்த 4 ஆண்டுகளில், மஞ்சள் விலை படிப் படியாக அதிகரித்து, 2010ம் ஆண்டு, ஒரு குவிண்டால் மஞ்சள் விலை 16 ஆயிரம் ரூபாயை எட்டியது. சராசரியாக மஞ்சள் விலை 200 சதவீத அளவிற்கு உயர்ந்ததையடுத்து, உற்சாகமடைந்த விவசாயிகள், அதிக அளவில் மஞ்சளை பயிரிடத் தொடங்கினர். தேசிய அளவில் மஞ்சள் பயிரிடும் பரப்பு 25 சதவீதம் அதிகரித்தது.

தமிழகத்தில் மஞ்சள் பயிரிடும் பரப்பளவு குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்தது. நடப்பு சந்தைப் பருவத்தில் மஞ்சள் உற்பத்தி 45 சதவீதம் அதிகரித்து 70 லட்சம் மூட்டைகளாக (ஒரு மூட்டை -70 கிலோ) உயர்ந்தது. இது, சென்ற ஆண்டு 48 லட்சம் மூட்டைகள் என்ற அளவில் இருந்தது. உற்பத்தி பெருகியதையடுத்து சென்ற ஆண்டு 7 லட்சம் மூட்டைகள் என்ற அளவில் இருந்த மஞ்சள் இருப்பு, நடப்பு பருவத்தில் 11 லட்சம் மூட்டைகளாக அதிகரித்துள்ளது. பொதுவாக, சந்தையில் மஞ்சள் வரத்து ஜனவரியில் தொடங்கி ஜூன் வரை நீடிக்கும். இதன்படி, நடப்பாண்டு மஞ்சள் உற்பத்தி அதிகரித்து, இருப்பும் உயர்ந்திருந்ததால் சந்தையில் விலை சரியத் தொடங்கியது. ஒரு குவிண்டால் மஞ்சள் விலை 7,000 -7,300 ரூபாயாக குறைந்தது. மேலும், சென்ற ஆண்டு டிசம்பரில், பருவம் தவறிய மழையால், மஞ்சளின் தரம் குறைந்தது. இதனால், மஞ்சள் ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டுள்ளது.தற்போது ஒரு குவிண்டால் மஞ்சள் 7,000 ரூபாய்கும் குறைவாக விலை போய் கொண்டுள்ளது. மஞ்சள் விலை உயர்வால் மகிழ்ச்சியடைந்து, அதிக அளவில் இதனை பயிரிட்ட விவசாயிகள், தற்போது விலை குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். மஞ்சள் பயிரிடும் பரப்பை குறைத்துக் கொண்டுள்ளனர். மஞ்சளுக்கான தேவை, கையிருப்பு ஆகியவற்றை கணக்கிடுகையில், அதன் விலை உயர வாய்ப்பில்லை என்று தெரிகிறது. எனினும், ஒரு குவிண்டால் மஞ்சள் விலை 6,000 ரூபாய்க்கும் கீழ் சரியாது என்று இத்துறையை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

**காளான் வளர்ப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2011,03:24 IST

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்டம், திரூர் கிராமத்தில், தமிழ்நாடு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில், காளான் வளர்ப்பு குறித்து, பயிற்சி அளிக்கப்பட்டது.வேளாண் அறிவியல் நிலையத்தின் தலைவர் டாக்டர் தேவநாதன் கலந்து கொண்டு பயிற்சி அளித்தார். பயிற்சியின் போது அவர், "காளான் புரதச்சத்து மிகுந்த உணவு.
இது, வீட்டில் வளர்க்க எளிதானது. இதை வளர்க்க, முதலீடு தேவையில்லை. சொற்ப பணமே போதுமானது.15 முதல் 20 நாட்களில், பயன் தரக்கூடியது. இதன் தேவை நாளுக்கு நாள்

அதிகரித்து வருகிறது. மேலும், ஏற்றுமதிக்கான தேவையும், அதிகரித்து வருகிறது. எனவே, குறைந்த முதலீட்டில், அதிக லாபம் பெறலாம்' என்றார்.

**தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில்உரம் இல்லாததால் விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2011,02:36 IST

சிறுபாக்கம் : தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் இல்லாததால் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.மாவட்ட கடைக்கோடி பகுதியான சிறுபாக்கம், மங்களூர், அடரிகளத்தூர், லக்கூர், வடபாதி ஆகிய ஊர்களில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன.இந்த வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான பயிர்க்கடன், உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள், வேளாண் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.இந்நிலையில் 40க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் தங்கள் வயல்களில் தோட்டக்கலை பயிர்களான மரவள்ளி, மஞ்சள், வாழை, நெல், பூக்கள் உள்ளிட்ட பயிர்களும், மானாவாரி பயிர்களான மக்காச்சோளம், வரகு, மணிலா ஆகிய பயிர்களை பயிரிட்டுள்ளனர்.பயிர்களுக்குத் தேவையான நடப்பு ஆண்டு ஆகஸ்ட்(ஆடி) மாதத்தில் பயிர்களுக்கு உரம் இடும் தருணமாக உள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பொட்டாஷ், டி.ஏ.பி., யூரியா, காம்ப்ளக்ஸ் உள்ளிட்ட உரங்கள் இல்லாமல் போனதால் கிராமப்புற விவசாயிகள் தவித்து வருகின்றனர்.மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கு வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தேங்காய் விலை உயர்வு; விவசாயிகள் "குஷி'**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2011,03:17 IST

பல்லடம் : தேங்காய் கொள்முதல் விலை ஒரு ரூபாய் உயர்ந்துள்ளதால், பல்லடம், சுல்தான்பேட்டை வட்டார தென்னை விவசாயிகள் "குஷி' அடைந்துள்ளனர்.பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரத்தில் தென்னை மரங்கள் மிகவும் அதிகம். எட்டு லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. இம்மரங்களில் விளையும் தேங்காய்கள், வியாபாரிகள் மூலம் கோவை, திருப்பூர், மதுரை, திண்டுக்கல், தூத்துக்குடி, சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு தினமும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.அரசு கொப்பரை மையங்களில் ஒரு கிலோ கொப்பரை ரூ.44.50க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. காங்கயம், வெள்ளகோவில்

வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.50க்கு மேல் கொள்முதல் செய்யப்படுகிறது.இரண்டு மாதத்துக்கு முன்பிருந்த விலையை விட, தற்போது கொள்முதல் விலை வெளிமார்க்கெட்டில் குறைந்து இருப்பினும், கட்டுபடியான விலை கிடைத்து வருவதால், பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரத்தில் கொப்பரை உற்பத்தி விறுவிறுப்பாக நடந்து வருகிறது.வெயில் காரணமாக கடந்த 75 நாட்களாக இளநீருக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதால், பல்லடம் பகுதியில் உள்ள தென்னை விவசாயிகள் பலர், தென்னையில் காய்கள் முற்றி தேங்காயாக மாறுவதற்கு முன்பே இளநீர் பருவத்திலேயே பெருமளவு பறித்து விற்பனைக்கு அனுப்பும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.இதன் காரணமாக, தேங்காய்க்கு கோவை, திருப்பூர், திண்டுக்கல், தூத்துக்குடி உள்ளிட்ட பகுதிகளில் கடும் கிராக்கி நிலவுகிறது. இதன் எதிரொலியாக, தற்போது தேங்காய் ரகம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கொள்முதல் விலை தோப்புகளில் உயர்ந்துள்ளது. இவ்விலை உயர்வு, பல்லடம், சுல்தான்பேட்டை தென்னை விவசாயிகளை "குஷி' அடையச் செய்துள்ளது.

**கரும்பு பயிருக்கு குழி உரமிடல் பயிற்சி வேளாண் கல்லூரி மாணவியர் பங்கேற்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2011,02:42 IST

மோகனூர்:கரும்பு பயிருக்கு குழி உரமிடுவது குறித்து, மோகனூர் முன்னோடி விவசாயி அஜிதன் தோட்டத்தில், வேளாண் அறிவியல் கல்லூரி மாணவியர் பயிற்சி பெற்றனர்.திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த இறுதியாண்டு படிக்கும் மாணவ, மாணவியர், கிராம தங்கல் நிகழ்ச்சியில் ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்துக்கு சென்று, ஒரு மாதம் தங்கியிருந்து அப்பகுதியில் மேற்கொள்ளப்படும் பயிர் வகைகள், சாகுபடி முறைகள் குறித்து பயிற்சி பெறுவர்.அதன்படி, தற்போது, 10 மாணவியர், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் தங்கியிருந்து மோகனூர் பகுதியில் மேற்கொள்ளப்படும் சாகுபடி முறைகளை குறித்து நேரடியாக களப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதில், கரும்புக்கு குழி உரமிடல் பற்றி முன்னோடி விவசாயி அஜிதன் தோட்டத்தில் பயிற்சி பெற்றனர்.அப்போது, வேளாண் கல்லூரி மாணவியர் கூறியதாவது:கரும்பு நடப்பின் இரண்டு மாதம் கழித்து, பயிருக்கு உயிரி உரமிட வேண்டும். உயிரி உரம் இடுவதன் மூலம், 80 சதவீதம் தழைச்சத்து பயிருக்கு கிடைக்கிறது. மேலும், மண்ணில் உள்ள நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் உற்பத்தி அளவு அதிகரிக்கிறது. உயிரி உரமான கருப்பு யூரியா (குளுக்கனோ அசட்டோ பாக்டர் டைஅசோ ட்ரோபிக்ஸ்) குழி உரமிடல் மூலம் உரமிட வேண்டும்.இந்த உயிர்

உரமானது, பயிரின் வேர்பகுதியை நேரடியாக சென்றடைகிறது. மேலும், உரமானது வீணாகாமலும், ஆவியாகாமலும், நீர்பாசனத்தின் போது நீரில் கரையாமலும் தவிர்க்கப்படுகிறது. ஒரு ஏக்கர் பயிருக்கு, ஐந்து கிலோ உயிரி உரம், 100 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் ஆகியவற்றை, ஒரு நாளைக்கு முன்பாகவே நன்கு கலந்து வைக்க வேண்டும்.நான்கு அடி நீளமுள்ள குச்சியின் அடிப்பகுதியை கூர்மைப்படுத்தி, பயிரின் வேர் பகுதியின் அருகில் இரண்டு இன்ஞ் ஆழத்திலும், ஆறு இன்ஞ் அகலத்திலும் துளையிட்டு, இரண்டு முதல் மூன்று கிராம் வரை உயிரி உரத்தை குழியில் இட்டு பின் மூடிவிட வேண்டும். பிறகு, நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். இந்த முறைகளை பின்பற்றினால், பயிர் நன்கு வளர்வதுடன், பயிருக்கு தேவையான சத்துக்கள் கிடைக்கும்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**விபரங்களுடன் விதைகள் விற்க அறிவுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2011,02:48 IST

கோவை : விதை விற்பனையில் ஈடுபட்டுள்ளோர் உரிய விபரங்களை குறிப்பிட வேண்டும். தவறும்பட்சத்தில், விதை சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது, என அறிவிக்கப்பட்டுள்ளது.கோவை மற்றும் சுற்றுப்பகுதிகளில், கடந்த இரண்டு வாரங்களாக தென்மேற்கு பருவ மழை பெய்து வருகிறது. இதனை பயன்படுத்தி ஆவணி பட்ட விதைப்பு பணிக்காக, விளை நிலத்தை பக்குவப்படுத்தும் பணியில், விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், விதை சான்று மற்றும் அங்கக சான்றுத்துறை, விதை உற்பத்தி, விற்பனையாளர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.கோவை, விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுசாமிநடேசன் வெளியிட்டுள்ள செய்தி:விற்பனை செய்யும் அனைத்து விதை கொள்கலனில் உள்ள விபர அட்டை, ஓபல் பச்சை நிறத்தில் இருக்க வேண்டும். விபர பட்டியலில் அனைத்து விபரங்களும் தெளிவாக குறிப்பிட வேண்டும். விபர அட்டை எண், பயிர், ரகம், குவியல் எண், பரிசோதனை நாள், காலக்கெடு நாள், இனத்தூய்மை, முளைப்புத்திறன், புறத்தூய்மை, நிகர எடை, உற்பத்தியாளர் பெயர், முகவரி, நஞ்சு கலக்கப்பட்டிருந்தால் நஞ்சின் பெயர், பயிரிடப்பட உகந்த இடங்கள், பருவம் ஆகியன விபர பட்டியலில் அடங்கி இருக்க வேண்டும். குறிப்பிட்டுள்ள விபரங்களில் எந்த ஒரு மாற்றமோ அல்லது விபரம் விடுபட்டிருந்தால், விதைச் சட்டம், விதை விதிகள்படி நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்டத்தில் விதை உற்பத்தி வினியோகம், விற்பனை செய்யும் அனைத்து நபர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

## மஞ்சள் விலை ரூ.300 சரிவு

பதிவு செய்த நாள் : 8/9/2011 0:48:54



ஈரோடு : மஞ்சள் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.300 குறைந்தது. மஞ்சள் விலை கடந்த 8 மாதங்களில் தொடர்ந்து குறைந்து வருகின்றது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அதிகபட்சமாக குவின்டால் ஒன்று ரூ.17 ஆயிரத்தை தாண்டி விற்பனையான நிலையில் தற்போது குவின்டால் அதிகபட்சமாக ரூ.6 ஆயிரத்து 346க்கு விற்பனையானது.
கடந்த வாரத்தை விட இந்த வாரம் குவின்டால் ஒன்றுக்கு மேலும் ரூ.300 வரை விலை சரிந்துள்ளது.

நேற்று ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விரலி குவின்டால் ஒன்று ரூ.5,709 முதல் அதிகபட்சமாக ரூ.6,346 வரையிலும், கிழங்கு மஞ்சள் 5 ஆயிரத்து 593 முதல் ரூ.6 ஆயிரத்து 46 வரையிலும் விற்பனையானது. கடந்த வாரம் இறுதியில் குவின்டால் ஒன்றுக்கு ரூ.300 விலை சரிந்தது. நேற்று மேலும் குவின்டால் ஒன்றுக்கு ஸி300 வரை விலை சரிந்தது.